திருவள்ளுவராண்டு 2054

2024 நவம்பர், திசம்பர், சனவரி – காலாண்டிதழ்

மலர்–7 இதழ்–23

# உலகத்தமிழ்

## பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

E-ISSN : 2581 - 9712

வெளியீடு

உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

# உலகத்தமிழ் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்


## ஆசிரியர் குழு

### தலைமை ஆசிரியர்

முனைவர் **அவ்வை அருள்**
இயக்குநர்(பொ),
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை
தொலைபேசி: 0452-2530766
நிகரி: 0452-2530799
**மின்னஞ்சல்:** director@utsmdu.org

### ஆசிரியர் குழு (இந்தியா)

முனைவர் **வி.திருவள்ளுவன்**
துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்,
தமிழ்நாடு
**மின்னஞ்சல்:** tamilunivc@gmail.com

**திரு.கோபிநாத் ஸ்டாலின்**
இயக்குநர் (மு.கூ.பொ)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை,
தமிழ்நாடு
**மின்னஞ்சல்:** iits@tn.nic.in

முனைவர் **கோ.பிலவேந்திரன்**
பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்,
தமிழ்நாடு
**மின்னஞ்சல்:** drarangapari@gmail.com

முனைவர் **வை.இராமராஜபாண்டியன்**
புலத்தலைவர், தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை,
தமிழ்நாடு
**மின்னஞ்சல்:** drramarajapandian@gmail.com

முனைவர் **தி.உமா**
பேராசிரியர், நவீன இந்திய மொழிகள் மற்றும்
இலக்கியவியல் துறை,
தில்லிப் பல்கலைக்கழகம், தில்லி-110007
**மின்னஞ்சல்:** dumadevi@gmail.du.ac.in / umadchitra@gmail.com

### ஆசிரியர் குழு (அயலகம்)

திரு **ம.ஜெயராமசர்மா**
விக்டோரியா இந்துக் கல்வி மையத்தின் ஆலோசகர்,
அக்கினிக்குஞ்சு மின்னிதழ் இலக்கிய ஆலோசகர்,
"தடாகம்" தமிழ் இலக்கிய வட்டத்தின் பண்பாட்டு
இலக்கிய ஆலோசகர், ஆஸ்திரேலியா.
**மின்னஞ்சல்:** jeyaramiyer@yahoo.com.au

முனைவர் **சி.இளங்குமரன்**
விரிவுரையாளர், தமிழ்ப்பிரிவு,
தற்கால மொழிகள் துறை,
மொழிகள் மற்றும் தகவல் தொடர்பியல்புலம்,
சுல்தான் இட்ரிஸ் பல்கலைக்கழகம்,
தாஞ்சோங்மாலிம், பேராக், மலேசியா.
**மின்னஞ்சல்:** s.lingkumaran@gmail.com

முனைவர் **இர.பிரபாகரன்**
கணினித் தொழில்நுட்ப வல்லுநர்,
பல்வேறு தமிழ்ச்சங்கங்களில் பதவி வகித்தவர்,
அமெரிக்கா.
**மின்னஞ்சல்:** prabu0111@gmail.com

முனைவர் **வி.ஜீவகுமாரன்**
அரச நூலகத்தில் தமிழ்ப்பகுதியின் பொறுப்பாளர்,
ஆலோசகர், நகரசபையின் புவியியல் சார்ந்த
தொழில்நுட்பப்பிரிவின் பொறுப்பாளர், டென்மார்க்.
**மின்னஞ்சல்:** jeevakumaran5@gmail.com

முனைவர் **ஆ.ரா.சிவகுமாரன்**
இணைப்பேராசிரியர், தமிழ்மொழி பண்பாட்டுப் பிரிவு,
தேசியக் கல்விக் கழகம், நன்யாங் தொழில்நுட்பப்
பல்கலைக்கழகம், சிங்கப்பூர்.
**மின்னஞ்சல்:** sivakumaran.r@nie.edu.sg

## செய்தி ஆசிரியர்

முனைவர் **சி.புவியரசு**
மின்னிதழ் உருவாக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

## தொடர்புக்கு

0452 - 2530766 / 2530799
utsmdu2@gmail.com
Uts Mdu
@TamilUlaga
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

## முகவரி

இயக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை,
மருத்துவர் தங்கராசு சாலை,
சட்டக்கல்லூரி அருகில்,
மதுரை - 625020




# உலகத்தமிழ்

## காலாண்டிதழ்

## உள்ளே


| வ. எண் | தலைப்பு | பெயர் | பக் |
|---|---|---|---|
| 1. | ஈழத்தில் கண்ணகை அம்மன் வழிபாடும் மண்பேராய நோக்கும் | பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி | 04 |
| 2. | ஐங்குறுநூற்றில் உளவியல் | முனைவர் ந. தமிழ்மொழி | 16 |
| 3. | செம்மொழி இலக்கியங்களில் அமைதியும் நல்லிணக்கமும் | முனைவர் இரா.சிங்கராஜா | 27 |
| 4. | மலேசியத் தமிழ் நாவலின் கருப்பொருள் வகையாக்கமும் தமிழாசிரியர்களின் ஈடுபாடும் – ஓர் ஆய்வு | சீனிவாசன் சந்திரன் | 34 |
| 5. | தமிழ்கூறும் 'மதுரைகள்' | முனைவர் பி. ஆறுமுகம் | 39 |
| 6. | கம்பராமாயணத்தில் தானங்கள் | முனைவர் க.மங்கையர்க்கரசி | 47 |
| 7. | அவ்வை நிர்மலாவின் 'மந்தாரை' கவிதைத் தொகுதிகளில் காணலாகும் இயற்கை சிந்தனைகள் | வை.நித்தியா | 55 |
| 8. | ஒலி அடங்கிப் பேசும் அகப்பாத்திரங்கள் | ச.கண்மணிகணேசன்(ஓய்வு) | 62 |
| 9. | கறுப்பர் விடுதலையில் : ஆளுமைகளும் அரசியல் இயக்கங்களும் | ஊ. முத்துப்பாண்டி | 71 |
| 10. | கூத்தராற்றுப்படை குறிப்பிடும் நிகழ்த்து கலைஞர்களின் வாழ்வியலும் பண்பாடும் | ச.வாசுதேவன் | 83 |
| 11. | சூழலியல் நோக்கில் நற்றிணையில் வெள்ளிவீதியார் பாடல்கள் | வி.ஜெயபிரியா | 89 |
| 12. | சே.இராமானுஜம் நாடகங்களில் விளிம்புநிலை மக்கள் | க.சிவஞானசம்மந்தம் | 95 |
| 13. | தமிழ் இலக்கியங்களில் பாண்டிய நாட்டுச் சித்திர மாடங்கள் | முனைவர் கு.கனிமணி | 102 |
| 14. | திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் கையாளும் எண்ணுப்பெயர்கள் | திருமதி ஜே.எஸ். ஊர்மிளா | 107 |
| 15. | திருநெல்வேலி வட்டார வழக்குச் சொற்கள் | முனைவர் மு.ரா.மஜிதா பர்வின் | 116 |
| 16. | நைஜீரியர்களின் வருகையும் கலாச்சார நெருக்கடியும் - 'நைரா' நாவலை முன்வைத்து | மு.காயத்ரி | 121 |
| 17. | ஃபெப்ரீசியஸின் தமிழ் இலக்கண எழுதியல் | முனைவர் ச. முருகேசன் | 128 |

# கறுப்பர் விடுதலையில் : ஆளுமைகளும் அரசியல் இயக்கங்களும்



**ஊ. முத்துப்பாண்டி**
Reg.No. MKU21FFOL9979,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் உயராய்வு மையம்,
அமெரிக்கன் கல்லூரி, மதுரை - 02

**தொடக்கமாக...**

ஆப்ரிக்காவிலிருந்து கறுப்பர்களை வெள்ளையர்கள் அமெரிக்காவிற்கு அடிமைகளாகக் கொண்டுவரும்போதே கறுப்பர்களிடமிருந்து எதிர்ப்பு தொடங்கிவிட்டன. உயிர்க்காகப் போராடிக்கொண்டிருந்த நிலையிலும் தப்பி ஓடுவதற்கும், வெள்ளையர்களைச் சுட்டுக்கொள்வதற்கும் சில கறுப்பர்கள் தயங்கவில்லை. அதேபோல், அடிமைகளைக் கப்பலில் கொண்டுவரும்போது, பெண்களைப் பாலியல் ரீதியாக வெள்ளையர்கள் கொடுமைப்படுத்தினர். அதற்காகச் சில கறுப்பர்கள் தங்கள் உயிரை மாய்த்துக்கொண்டும் வெள்ளையர்களைத் தாக்கினர். பிறகு, பண்ணைகளிலும் கறுப்பர்கள் தப்பிப்பதற்கும் எதிரிகளைத் தாக்குவதற்கும் அஞ்சவில்லை. மாறாக, இவையெல்லாம் ஆங்காங்கே தனிநபராக நிகழ்த்தப்பட்ட எதிர்ப்புகளாகும். இவை, வெள்ளையர்களால் உடனடியாகக் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. இந்நிலையில்தான் தனிநபர் தாக்குதலில் ஈடுபட்ட வந்த கறுப்பர்கள் தங்களுக்கென்று போராடக்கூடிய தலைவர்களோடு இணைந்து செயல்படலாயினர். குறிப்பாக, எதிர்ப்பின் வழியாக மட்டுமே உரிமைகளைப்பெற முடியும் என்ற நிலை உருவானபோது நிறத்தின் மீதான இனப் பாகுபாட்டுக்கு எதிராக உள்நாட்டு போர்களும் போராட்டங்களும் வெள்ளையர்களுக்கு எதிராகக் கறுப்பர்களால் நிகழ்த்தப்பட்டன. இவற்றிலிருந்து உரிமைகள் கிடைக்கப்பெற்றாலும் பேரிழப்புகளும் ஒருசேர நிகழ்ந்தன. இதனால், கறுப்பினத் தலைவர்களிடையே இருவேறு இயக்கங்கள் கிளைக்கத் தொடங்கின. அதாவது, மார்ட்டின் லூதர் கிங் போன்ற மிதவாத இயக்கங்களும், மால்கம் எக்ஸ் போன்ற தீவிரவாத இயக்கங்களும் நிறவேற்றுமைக்கு எதிராகப் போராடத் துவங்கினர். அந்தவகையில், ஆப்ரோ-அமெரிக்கர்களின் விடுதலைக்கு வித்திட்ட ஆளுமைகள், இயக்கங்களின்

பங்களிப்பால் நடந்த மாற்றங்கள், எழுதப்பட்ட இலக்கியங்கள் உள்ளிட்டவற்றை ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மார்கஸ் கார்வி (Marcus Garvey)**

1887ஆம் ஆண்டு ஆகஸ்ட் பதினேழாம் தேதி ஜமைக்காவில் பிறந்த மார்க்கஸ் மோசையா மரூன் பழங்குடி இனத்தைச் சோந்தவர். 'ஆப்ரிக்காவுக்குத் திரும்புங்கள்' (Back to Aprica Movement) என்ற முழக்கத்தை முன்வைத்து உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து கறுப்பர்களை அணிதிரட்டியவர். உலகமெங்கும் கறுப்பின மக்கள் அனுபவிக்கும் அவலங்களைப் பார்த்த கார்வி, அதிலிருந்து அவர்களை விடுவிக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். கல்வியில், வேலைவாய்ப்பில், பொருளாதாரத்தில் வெள்ளையர்களைச் சார்ந்து இருந்ததால், கறுப்பர்கள் விடுதலை பெற முடியாது. நமக்கான பள்ளிகளை நாமே தொடங்குவோம். நமக்கான பொருளாதாரத்தை நாமே கட்டியமைப்போம். நமக்கான வேலைகளை நாமே உருவாக்குவோம் என்றார் இத்தகைய தற்சார்பு மட்டும் போதாது. உலகெங்கும் உள்ள கறுப்பர்கள் யாவரும் தமது தாய்நாடான ஆப்பிரிக்காவுக்குத் திரும்ப வேண்டும் என்றார் கார்வி. இதற்காக, உலக நீக்ரோ முன்னேற்றக் கழகம் (Universal Negro Improvement Association) என்ற அமைப்பைக் கார்வி உருவாக்கினார். 'நீக்ரோ உலகம்' என்ற பத்திரிகையையும் நடத்தி வந்தார்.

**ஜிம் குரோ சட்டங்கள் (Jim Crow Laws)**

வெள்ளையர்கள் நீரருந்தும் இடங்களில் கறுப்பர்கள் நீரருந்த முடியாது. சினிமா திரையரங்கங்களில் வெள்ளையர்களோடு சமமாக உட்கார முடியாது. அவர்களுக்குச் சமமாக ஓட்டல்களில் அமர்ந்து உணவருந்த முடியாது. கறுப்பின மருத்துவர்கள் பிறருக்கு மருத்துவம் பார்க்க முடியாது. கருப்பினத்தவர் மீது ஏதேனும் குற்றம் சுமத்தப்பட்டால் அவர்கள் வெள்ளையர்களைப் போல விசாரிக்கப்படுவதில்லை. அவர்கள் பொது இடங்களில் வெள்ளையர்களால் அடித்துக் கொலை செய்யப்பட்டனர். கறுப்பினப் பெண்கள் பாலியல் ரீதியான தாக்குதல்களுக்கு ஆளாக்கப்பட்டனர்.

கருப்பினத்தவர் கட்டாய ராணுவச் சேவையில் ஈடுபடுத்தப்படுனர். அரசியல் ரீதியாக அவர்களுக்கு எவ்வித நிகராளித்துவத்தும் வழங்கப்படவில்லை. வேலைச் செய்தால், வெள்ளையர்களுக்கு இணையான ஊதியம் கறுப்பர்களுக்கு வழங்கப்படுவதில்லை. மேலும், அவர்கள் தொழிற்சங்கங்களில் சேர்வதற்கான உரிமையும் மறுக்கப்பட்டிருந்தது. கறுப்பினக் குழந்தைகள் தரம் குறைந்த பள்ளிகளில்

மட்டுமே அனுமதிக்கப்படுனர். வெள்ளையினப் பிள்ளைகளின் படிப்புகாலம் குறைவாக வைக்கப்பட்டிருந்தது. கறுப்பர்கள் பயிலும் பள்ளிகளுக்கான நிதி ஒதுக்கீடு மிகமிகக் குறைவாகவே இருந்தது.

முதல் உலகப்போர் முடிந்த பிறகு அமெரிக்காவில் பொருளாதார மந்தம் ஏற்பட்டது. கறுப்பின மக்களைப் பெருந்துன்பங்களில் ஆழ்த்திய சமயத்தில் அமெரிக்காவில் - குறிப்பாக, கறுப்பர்களின் வாழ்விடங்கள், கல்விக்கூடங்கள், போக்குவரத்து சாதனங்கள் முதலியவற்றை வெள்ளையர்களின் வாழ்விடங்கள் முதலியவற்றிலிருந்து தனியாகப் பிரித்து வைப்பது போன்ற நிகழ்வுகள் இன ஒதுக்கல் உள்ளிட்டவற்றைச் சட்டரீதியாகவே பாதுகாத்துவந்த தென்மாகாணங்களில் - வெள்ளையர்களின் பயங்கரவாத அமைப்புகள் புதுப்பிக்கப்பட்டன. இவற்றில் மிகவும் கொடூரமான 'கு க்ளக்ஸ் க்ளான்' (Ku Klux clan) என்னும் இரகசிய அமைப்பு, கருப்பினத்தவரைச் சித்திரவதை செய்வதையும் உயிரோடு எரித்துக் கொல்வதையும் தனது முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்தது.

**ஆபிரகாம் லிங்கன் (1809 - 1865)**

ஐக்கிய அமெரிக்காவின் 16வது குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்ட ஆப்ரகாம் லிங்கன் தன் ஆட்சிக்குட்பட்ட எல்லைப் பகுதியில் நிலவிய நிறப் பாகுபாட்டினை ஒழிக்கப் பல்வேறு நிலைகளில் குரல் கொடுத்தார். அதேவேளையில் இவருடைய குடியரசுப் பதவிக்கு ஆபத்து வரும்போதெல்லாம் துயராது கறுப்பின மக்களுக்கு நம்பிக்கையளித்தவராகத் திகழ்ந்தார். இவருடைய ஆட்சிக்காலத்தில் நிறவெறிக்கு எதிராகக் குரல்கொடுத்த நிலையில் அமெரிக்காவில் நிற வெறிக்கு எதிராக உள்நாட்டுப்போர் தொடங்கியது. அதாவது, ஆப்ரகாம் லிங்கம் பதவியிலிருந்த 1503 நாட்களில், 1458 நாட்கள் போரில் கழிந்துவிட்டன. இதற்கிடையில்தான் தன்னால் இயன்றவரை நிறவெறிக்கு எதிராகக் குரல்கொடுத்து வந்தார். இந்தப் பின்னணியில்தான் 1863 ஆம் ஆண்டு நவம்பர் 19ஆம் தேதி கெட்டிஸ் பர்க்கில் ஆப்ரகாம் லிங்கன் தனது புகழ்பெற்ற உரையை நிகழ்த்தினார். இந்த உரைக்குச் சில நாட்களுக்கு முன்புதான் உள்நாட்டுப்போரில் இறந்த கறுப்பின மக்களுக்கு அஞ்சலியோடு வரும் தலைமுறையினர்க்கு ஊக்கத்தையளித்தார். அவ்வுரையாக இவ்வாறாக அமைந்தது. அதாவது, அமெரிக்க நாட்டினைச் செல்வமிக்க நாடாக நிர்மாணித்தவர்கள் கறுப்பர்களே. அதேவேளையில் கறுப்பர்களை நிறத்தால் ஒடுக்கிய நாடும் இந்நாடே. தற்போது நம்முன்னோர்களை எண்ணி இவ்வொடுக்கு முறைக்கு எதிராக ஒன்றிணைந்து போராடுவோம் என்று உரை நிகழ்த்தினார்.

“இந்தப் போர்க்களக் கல்லறையை அவர்களுக்காக அர்ப்பணிக்கவோ புனிதப்படுத்தவோ மதிப்புசெய்கவோ முடியாது. வாழ்ந்து மடிந்த வீரர்கள் நம் சக்திக்கு மேலாகவே இந்தப் போரைப் புனிதப்படுத்தி இருக்கிறார்கள்”1 என்று உள்நாட்டு போர் குறித்தும் இறந்த கறுப்பின வீரர்களின் தியாகம் குறித்தும் ஆப்ரகாம் லிங்கன் கறுப்பின இளைஞர்களிடேயே உத்வேகத்தை அளிக்கும் வகையில் பேசினார். அதேபோல், அவருடைய அரசாட்சி குறித்து நம்பிக்கையளிக்கும் விதத்தில் கூறும்போது,

“இவர்களின் இறப்பு வீணானது அல்ல என்றும் இந்தத் தேசம் சுதந்திரத்தின் புதிய பிறப்பைப் பெற்றெடுக்க வேண்டும் என்றும்: மக்களால், மக்களுக்காக, மக்களே நடத்தி வரும் அரசாங்கம் இம்மண்ணில் என்றென்றைக்கும் அழியாது என்றும் உளமார உறுதியளிப்போம்”2 என்றும் குறிப்பிட்டார். அதாவது, கறுப்பின மக்களுக்களின் உரிமைகளுக்கா தனது பதவியின் மூலம் செயல்படுத்தக்கூடிய செயல்களைச் செய்து முடித்தவர்.

**மார்ட்டின் லூதர் கிங் (Martin Luter King 1929 - 1968)**

மார்ட்டின் லூதர் கிங் கறுப்பின மக்களின் பாதுகாவலராகவும் இனப் பகையை எதிர்த்த போதகராகவும் செயல்பட்டார். ஆப்ரிக்க - அமெரிக்க மனித உரிமை இயக்கத்தில் தலைவராக இருந்தவர். காந்திய வழியில் வன்முறையற்ற அறப்போராட்டத்தைப் பயன்படுத்தியவர். உலக அரங்கில் அமெரிக்காவின் மீது கற்பிக்கப்பட்ட புனிதப் பிம்பங்ளை சரித்து உண்மையைப் பறைசாற்றியவர். குறிப்பாக, 1955, டிசம்பர் 1இல் கறுப்பினப் பெண் ரோசா பார்க்ஸ் அமெரிக்காவிலுள்ள க்ளீவ் லேண்ட் அவென்யூ பேருந்தில் பயணம் செய்யும் போது இருக்கையில் அமர்ந்தாலும், வெள்ளையர்கள் ஏறிய பிறகு இடம் கொடுக்காலிருந்ததாலும் அவர் கைதுசெய்யப்பட்டார். இந்நிலையின்தான் அடிப்படை உரிமைகளைப் பெற்றுத்தருவது போன்ற போராட்டங்களை நடத்திவரும் மார்ட்டின் லூதர் கிங்கிற்கு பேருந்துப் பயணப் பிரச்சினை கவனத்திற்கு வருகிறது. இந்நிலையில், பெண் ரோசா பார்க்: கைதிற்கு எதிராகக் கிங் போராட்டத்தை மேற்கொண்டு வெற்றியும் பெற்றார். இப்போராட்டத்தில் வெள்ளையர்களுக்கும் அமெரிக்க அரசிற்கும் பொருளாதார இழப்பு ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இப்போராட்டம் கிங்கிற்கு மக்களவில் பெரிய நம்பிக்கை ஏற்பட்டது.

மார்ட்டின் லூதர் கிங் 28 ஆகஸ்ட் 1963 அன்று வாஷிங்டனில் உள்ள ஆப்ரகாம் லிங்கன் நினைவகத்தில் ‘எனக்குக் கனவு இருக்கிறது’ என்ற புகழ்பெற்ற உரையை 2,50,000 மக்கள் முன்னிலையில் நிகழ்த்தினார். அதில் 60,000 பேர் வெள்ளை

இனத்தவர்கள். இவ்வுரை உலகளவில் பெரும் கவனத்தைப் பெற்றது. இவ்வுரையில், கறுப்பின முன்னோர்கள் விட்டுச்சென்ற வாழ்வதற்கான உரிமை, சுதந்திரமாக நடமாடும் உரிமை, கட்டுப்பாடற்றை புழங்கும் உரிமை என மனித உரிமைகளை மீட்டெடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். அதேபோல், வெள்ளையர்கள் அனைவரையும் எதிர்ப்பது நமது போராட்டத்தை வெற்றியடையச் செய்யாது. அதனால், நமது உரிமைக்காகத் துணைநிற்கும் வெள்ளையர்களோடு சேர்ந்து உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்றும் கிங் குறிப்பிட்டார். அதாவது, "கறுப்பின விடுதலையும் வெள்ளையின விடுதலையும் ஒன்றெனக் கருதும் வெள்ளையின மக்கள் இன்று வெகுவாக வளர்ந்திருக்கிறார்கள். அதற்குச் சான்றாகவே பல வெள்ளையின மக்களை இங்கு நாம் காண்கிறோம். நம்மால் தனித்துப் பயணிக்க முடியாது."3

அதேவேளையில், மார்ட்டின் லூதர் கிங்கின் கருத்தை மால்கம் எக்ஸ், முகமது அலி போன்றோர் எதிர்ப்பு தெரிவித்தனர். வெள்ளையர்களால் ஒருபோதும் கறுப்பர்களுக்கு விடுதலை இல்லை என்று மால்கம் எக்ஸ் விமர்சனம் செய்தார். இதுபோன்ற விமர்சனங்களை எதிர்கொண்ட நிலையிலும் தொடர்ந்து கறுப்பின மக்களின் உரிமைக்காகப் போராடியவர் மார்ட்டின் லூதர் கிங்.

**மால்கம் எக்ஸ் (Malcolm X)**

கறுப்பின மக்களின் போராட்ட வரலாற்றில் மிக முக்கியமானவர் மால்கம் எக்ஸ். மார்ட்டின் லூதர் கிங் முதலான மிதவாதப் போராளிகளிடமிருந்து சற்று வேறுபட்டவர். என்னவென்றால், தீவிரமாகவும் நேரடியாகவும் வெள்ளையர்களை எதிர்த்துப் போராடியவர். இவருக்குப் பின்னால் பல கறுப்பின மற்றும் வெள்ளையின இளைஞர்கள் ஒன்றுகூடினர். இவர் போராளியாக உருவானதற்கு இவரது தந்தை முக்கியக் காரணமாக விளங்கியவர். இவரது தந்தையான ஏர்ல் லிட்டில் கென்யா நாட்டில் பிறந்தவர். கறுப்பினப் போராளி மார்கஸ் கார்வியின் பேச்சுகளாலும், போராட்டங்களாலும் ஈர்க்கப்பட்டவர். குறிப்பாக, கார்வியின் கொள்கைகளைப் பரப்பியும் அதற்கான செயல்பாடுகளைச் செய்து வந்தவர். இது வெள்ளையர்களுக்கு வெறுப்பை உண்டாக்கியது. அதனால், வாகனத்தை வைத்து மால்கமின் தந்தை கொல்லப்பட்டார். இச்சூழலிலிருந்து தான் மால்கம் தன்னை வெள்ளையர்களின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடக் காரணமாக அமைந்தது. அந்தவகையில்தான், ரவிக்குமார் எழுதிய 'மால்கம் எக்ஸ்' எனும் நூலிலின் முன்னுரையில் தலித் ஆளுமைகளில் ஒருவரான அயோத்திதாசர் முன்வைத்த தமிழ்ப் பௌத்தத்தையும்

மால்கம் எக்ஸ் பரப்பிய நேஸம் ஆஃப் இஸ்லாமையும் ஒப்பிட்டுப் பார்ப்பதாகப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

“மதத்தின் ஆசிபெற்ற சாதிவெறியை எதிர்க்க அயோத்திதாசர் கண்டு முன்வைத்ததைத் தமிழ்ப் பௌத்தம், நிறவெறியை எதிர்க்க மால்கம் கையெலெடுத்த இஸ்லாமை எனக்கு நினைவுபடுத்தியது. அயோத்திதாசரின் எழுத்துகள் தன்னம்பிக்கையை ஏற்படுத்தினவென்றால் மால்கம் எக்ஸின் பேச்சுகளும், எழுத்துகளும் உறுதியைத் தந்து போராடத் துவங்கின.”4 அதேபோல், கறுப்பினப் போராளிகளின் போராட்டங்கள் உலகளவில் கவனிக்கப்படுவதால் அப்போராட்டத்தோடு தலித்களும் இணைத்துக்கொள்ள முடிகிறது. என்றும், “ஆப்ரிக்க அமெரிக்கர்களின் போராட்ட வரலாறாக, அதை நடத்திச் சென்ற ஒரு போராளியின் வரலாறாக இது பார்க்கப்பட்டதை விடவும் இங்கு நடந்துவரும் தலித் மக்களின் எழுச்சிகரமான போராட்டங்களின் பகுதியாக இது உணரப்பட்டதே அதிகம். அந்த விதத்தில் தலித்துகளை அமெரிக்காவுக்கும், மால்கம் எக்ஸைத் தமிழ் நாட்டுக்கும் இது சொந்தமாக்கியிருக்கிறது.”5 என்று அயோத்திதாசரையும் மால்கம் எக்ஸையும் இணைத்துப் புரிந்துகொள்கிறார் ரவிக்குமார்.

மால்கம் எக்ஸ் தொடங்கிய ‘நேஷன் ஆஃப் இஸ்லாம்’ என்பது ஒரு மாற்று வாழ்க்கை முறையை முன் வைத்தே தவிர, மரபான மத நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை. அப்படித் தான் அயோத்திதாசரும், அம்பேத்கரும் பௌத்தத்தை ஒரு மார்க்கமாக மாற்றினார்களேயொழிய மரபான புத்தமதத்தை அவர்கள் தழுவவில்லை. இதற்கான காரணங்கள் விரிவாகப் பேசப்பட வேண்டியவை.

**இசைத்துறையில் ஏற்பட்ட கறுப்புப் புரட்சி**

பாப்மார்லே (Bob Marley) கரீபியன் கடலில் ஜமைக்கா தீவில் நைன் மைல் எனும் கிராமத்தில் பிறந்தார். இவர் இசையில் இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் ஆளுமைகளில் ஒருவராக உருவானவர். ரெகே (Reggae) இசையை மிகப் பிரபலமான இசையாக மாற்றி இன்று ‘பா’ இசையாக உலகில் நிலைபெறச் செய்தவர் பாப்மார்லி. அவரே பாடலாசிரியர், இசையமைப்பாளர், பாடகர். பா இசையை ஒடுக்கப்பட்ட மக்களின் கீதமாக மாற்றியமைத்தவர். குறிப்பாக, பாப்மார்லே பா ரஸ் தஃபாரி என்ற மதத்திலும் அதன் கடவுளான ஜா (Jah) விலும் ஆழமான நம்பிக்கை கொண்டவர். கறுப்பினமே உலகின் உயர்ந்த இனம் என்று உரக்க அறிந்தது ரஸ்தஃபாரி தத்துவம். பா மார்லி பிறப்பதற்கு முன்பே ஜமைக்காவில் கறுப்பர்கள் வாழும் பகுதிகளில் அந்தக் கொள்கை

பரவலான ஆதரவைப் பெற்றிருந்தது என்றும் இச்சூழலைப் பாப்மார்லியே இச்சமயத்தைத் தழுவுவதற்குச் சுதந்திரத்தை நேசிப்பதற்கும் வழிவகுத்தது என்று ரவிக்குமார் எழுதிய பா மார்லி இசைப்போராளி எனும் நூலில் குறிப்பிடுகிறார். அவரது வசீகர வரிகளும், ஈர்த்திழுக்கும் இசையும் உருவாக்கின. பாதிப்பினால் நியூசிலாந்து, ஜப்பான், ஆஸ்திரேலியா, ஜிம்பாப்வே முதலிய எத்தனையோ நாடுகளில் ஏராளமானவர்கள் ரஸ்தஃபாரி மதத்தைத் தழுவிக்கொண்டார்கள். இவர் இசைக் கலைஞனாக உருவெடுத்துக்கொண்ட காலத்தில் ஒரு நாள் நாளேட்டில் வந்த அறிக்கையைப் படிக்கிறார். அறிக்கையில் சில பகுதி பின்வருமாறு அமைந்துள்ளது. அவை,

“கறுப்பின மக்கள் தமது நிலைமையை எண்ணித் திருப்தி அடைந்துவிட்டதாக யாராவது நினைத்தால் அது தவறு அவர்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள். மரியாதையை அவர்களிடம் பணமில்லை என்பது உண்மைதான். ஆனால் அடுத்த முப்பதாண்டுகளில் நிலைமை இப்படியே இருந்து விடாது. மாற்றம் என்பது சமூக வளர்ச்சிப் போக்கில் வரவேண்டும். இல்லாவிட்டால் வெள்ளையர்கள் என்னென்ன வழிமுறைகளைப் பயன்படுத்தி அந்த மாற்றத்தை நாம் கொண்டு வர வேண்டும். எப்படியாவது நாம் விரும்பியதை நாம் அடைந்தே தீருவோம்...”6 என்ற நாளேட்டில் வந்த அறிக்கையைப் படித்த பிறகு பாப்மார்லே தனது இசைப் பயணத்தை மாற்றியமைக்கத் தொடங்கினார். தனது இசையைச் சமூக விடுதலைக்கான ஆயுதமாக்க வேண்டியதன் தேவையை அறிக்கையின் மூலம்தான் உணரத்தொடங்கினார். அவரிடையே ஏற்கனவே மார்கஸ் கார்வியின் பிரச்சாரம் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அதேபோல், ஒரு வெள்ளையருக்கு மகனாகப் பிறந்தது தனது பிறப்பில் நேர்ந்துவிட்ட பிழையைச் சரிசெய்ய மார்லி தனது கறுப்பின அடையாளத்தையே கொடியாக ஏந்தினார். குறிப்பாக, ஜமைக்கா நாட்டிலுள்ள குப்பங்களில் மக்கள் எப்படியெல்லாம் ஏமாற்றப்படுகிறார்கள், எவரால் சுரண்டப்படுகிறார்கள் என்பவற்றை மார்லி தனது பாடல்களில் மூலம் எடுத்துக்கூறினார். அதேபோல், ரெகே இசையென்பது மக்களின் இசைதான் அது மக்களிடையே அரசியல் கருத்துகளை எடுத்துச்சொல்லக்கூடியது என்ற நம்பிக்கையைக் கொண்டிருந்தார் மார்லி. உலகளவில் ஒடுக்கப்பட்ட இளைஞர்களிடையே புரட்சி நாயகனாக இன்றுவரை வலம் வருகிறார் பா மார்லி. இந்நிலையில்தான் இந்தியாவில் தலித் இளைஞர்கள் தங்களின் கலையின் ஆதர்சநாயகனாக பாப்மார்லியை வரித்துக்கொண்டனர்.

**கறுஞ்சிறுத்தை (Black Panther)**

1960களில் ஹர்லாம் மறுமலர்ச்சியையொட்டிக் கறுப்பின மக்களிடையே பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாக, கறுப்பின இளைஞர்கள் நிறவெறிக்கு எதிராக பல்வேறு இயக்கங்களை உருவாக்கத் தொடங்கினர். அவற்றில், கறுப்பினச் சமத்துவத்திற்காக உருவாக்கப்பட்ட இரண்டு அமைப்புகள் மிக முக்கியமானவை. ஒன்று புக்கர் வாஷிங்டன், மார்ட்டின் லூதர் கிங், ரே, அபெர்நதி போன்ற தலைவர்களின் அகிம்சை வழிப் போராளிகள் இயக்கம். இவ்வியக்கத்தால் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களில் வெள்ளையர்களும் பங்கேற்றனர். அதேவேளையில் நூற்றாண்டுகளாகத் தொடரும் நிறவெறி ஒதுக்கல், வன்முறை கொடுமைகளைப் போதிய அளவு எதிர்த்துப் போராடுவதால் சலிப்புற்றவர்களின் மற்றொரு இயக்கம் உருவானது. இது டு போய்ஸ், கார்வி, மால்கம் எக்ஸ் போன்ற தலைவர்களால் உருவாக்கப்பட்டது. மேலும் வெள்ளையர்களின் மதம், கலாச்சாரம், மதிப்பீடுகள் என அனைத்தையும் மறுதலித்து இஸ்லாமைத் தழுவிய கறுப்பர்கள் தமக்கென ஒரு இஸ்லாமியத் தேசத்தை உருவாக்க மற்றொரு வகை அமைப்பையும் உருவாக்கினர். அவ்வியக்கத்தில் புரட்சிகரமான கொள்ளைகள் கடைபிடிக்கப்பட்டன. அதாவது, அவர்கள் தங்கள் எஜமானர்களின் பெயர்கள் தங்கள் பெயருடன் எக்ஸ் என்பதைச் சேர்த்துக் கொண்டனர். தங்களை அழைக்க வெள்ளையர்களால் உருவாக்கப்பட்ட 'நீக்ரோ' என்ற சொல்லாடலுக்குப் பதிலாக 'கறுப்பர்' என்று சொல்லைப் பெருமையுடன் கூறிக்கொண்டனர். மால்கம் எக்ஸ் மெக்கா சென்று திரும்பிய பின் 1965இல் புதிய 'கறுப்பு ஆட்சி அதிகாரம்' எனும் அமைப்பைத் தொடங்கினார். கறுப்பு ஆட்சி அதிகாரம் எனும் இயக்கத்தின் வழி கறுப்பர்களுக்கெனத் தனிப் பண்பாட்டையும், சுதந்திரத்தையும் உருவாக்கிக் கொள்ள முயன்றனர். அதேவேளையில் கறுப்பர்களுக்கு வாக்களிக்கும் உரிமையைப் பெறுவதன் மூலம் உயர்பதவிகள் பெறவேண்டும் என்றனர். கறுப்பர்கள் வெள்ளையர்களின் பண்பாட்டு மதிப்பீடுகளை விட்டுத் தமக்கான மதிப்பீடுகளையும் அழகியலையும் உருவாக்கிக் கொண்டனர். இம்மாதிரியான கொள்கைகள் செயல்வடிவம் பெறல் இருப்பதைக் கண்ட ஹென்றி நியூட்டன், பாபி ஸ்கேல் எனப் படித்த இரு கறுப்பின இளைஞர்களால் 1966இல் ஒக்லாந்தில் 'கறுப்புச் சிறுத்தை இயக்க'த்தைத் தொடங்கினர். ஸ்கேல் இவ்வியக்கத்தின் தலைவராகவும், நியூட்டன் பாதுகாப்பு அமைச்சராகவும் பொறுப்பேற்றனர். மாணவர் அறவழி குழுவைச் சேர்ந்த கார்மிகோல் பின் அதன் பிரதமராகப் பொறுப்பேற்றார். 'சிறுத்தைகள் எவரையும் முதலில் தாக்குவதில்லை. அது போன்றதே நம் இயக்கம்' என்று கொள்கையை

வகுத்துக்கொண்டனர். மேலும் அவர்கள் தங்களை மால்கம் எக்ஸ்சின் பிள்ளைகள் என்று அழைத்துக்கொண்டனர். மார்ட்டின் லூதர் கிங், மால்கம் எக்ஸ் ஆகியோரின் படுகொலைகள் கறுப்புச் சிறுத்தைகளைக் கொதித்தெழச் செய்தன.

இயக்கம் தொடங்கிய நான்காண்டுகளில் கறுப்புச் சிறுத்தைகள் பெறும் வளர்ச்சி பெற்றனர். 70 கிளைகளில், 3000 இளைஞர்கள் உறுப்பினராகச் சேர்ந்தனர். அதேசமயத்தில் கடுமையான ஒழுக்க விதிகள் கடைபிடிக்கப்பட்டன. இயக்கத்திற்கென்று முத்திரைகள், கறுப்புத் தோலாடைகள் அவர்களின் சீருடையாக அணிவிக்கப்பட்டன. மேலும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கெதிராக பேரணிகள், போராட்டங்கள், மறியல்கள், கண்டனங்கள் போன்ற செயல்பாடுகள் வெள்ளையர்களை நிலைகுலைய வைத்தன. அதுவரையில் கறுப்பின இளைஞர்களாக மட்டும் செயல்பட்டுவந்த கறுப்புச் சிறுத்தையில் வெள்ளையினத்தைச் சேர்ந்த இளைஞர்களும் பங்கேற்றனர். அதிகாரப் பரவலாக்கத்தை முன்வைத்துச் செயல்பட்ட இவ்வியக்கம் அமெரிக்க அரசாங்கத்திடம் சில கோரிக்கைகளை முன்வைத்தனர். கறுப்பர்களின் போராட்டங்கள் வேலைவாய்ப்புக்காகவும், கறுப்பர்களைச் சுரண்டுவது தடுக்கப்பட வேண்டும் என்றும் வீடு, கல்வி, நிலம் வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவும் நடத்தப்பட்டன. இது தவிரப் போலீஸ் வன்முறைகளை எதிர்த்தும், சிறையிலடைக்கப்பட்டுள்ள நீக்ரோக்களை விடுதலைச் செய்ய வேண்டுமென்பதும் அவர்களது கோரிக்கையாகும். கறுப்பர் மீதான வழக்குகளை விசாரிக்கக் கறுப்பு நீதிபதிகளே நியமிக்கப்பட வேண்டுமென்றனர்.

கறுஞ்சிறுத்தை இயக்கம் கறுப்பின எழுச்சியையும் மார்க்சியத்தையும் இணைத்துப் போராடினர். கறுப்பின மக்கள் விடுதலைக்கான கறுஞ்சிறுத்தை இயக்கம் ஒரு மார்க்சிய லெனினியக் கட்சியே. இது மார்க்சியத்தைச் செயல்படுத்தும் என்று நியூட்டன் அறிவித்தார். குறிப்பாக, கட்சி உறுப்பினர்களிடையே மாவோ, சேகுவேரா, மால்கம், ஃபனான் போன்றோரின் கருத்துகளைப் பரப்பினர். மேலும், நாங்கள் முதலாளித்துவம், நிறவெறி என இரண்டு தீமைகளை எதிர்த்தும் போராடி வருகிறோம் என்றும் குறிப்பிட்டார் நியூட்டன் என்று டி. ஞானையா எழுதிய 'அமெரிக்காவின் ஒபாமாக்களும் இந்தியாவின் தலித்துகளும்' என்ற நூலில் பதிவுசெய்துள்ளார். எனவே மார்க்சியக் கருத்துகளுக்கும் கறுஞ்சிறுத்தை இயக்கத்திற்குப் பின்புலமாக இருந்துள்ளது என்பது நியூட்டனின் கூற்றுவழிப் புரிந்துகொள்ளலாம். அதாவது, கறுப்பின எழுத்தாளர்கள் பெரும்பாலும் மார்க்சியப் பின்புலத்திலிருந்து வந்தவர்கள். அதேவேளையில் கறுப்பின அரசியலையும் தொடர்ந்து விவாதத்திற்கு உட்படுத்தியவர்கள். அந்தவகையில், ஃபனான் மார்க்சியப்

பார்வையோடு கறுப்பின ஒடுக்குமுறையைக் கேள்விக்குட்படுத்தினார். மேலும், காலனிய அதிகாரத்தைப் பட்டவர்த்தமாக எழுதியும் பேசியும் வந்தவர். எனவே மார்க்சியப் பின்புலமும் கறுப்பின எழுச்சிக்கு உறுதுணையாக இருந்துள்ளது என்பதைப் பார்க்க முடிகிறது. கறுஞ்சிறுத்தை இயக்கம் அல்ஜீரியா முதலான நாடுகளிலும் புரட்சிகர இயக்கமாக அங்கீகரிக்கப்பட்டது. இதுபோன்ற சூழலில்தான் கறுஞ்சிறுத்தை இயக்கத்தைச் சிதைக்க (FBI) உளவுத்துறை பல நெருக்கடிகளைக் கொடுத்தது. காவல்துறையும் இயக்கத்தின் உறுப்பினர்களைக் கொன்று குவித்தனர். காலப்போக்கில் கறுஞ்சிறுத்தை இயக்கம் வலுவிழந்தது. ஆனால், இவ்வியக்கத்தால் பல மாற்றங்கள் கறுப்பின மக்களிடையே உருவாகின. குறிப்பாக, 1970-80களில் வேலை வாய்ப்பு அதிகரிப்பு, ராணுவத்தில் பங்கு, கல்வி, அரசியலில் பங்கு எனப் பல மாற்றங்கள் உருவாகக் கறுஞ்சிறுத்தை இயக்கம் உதவியது. கறுப்பர்களின் மிதவாத தீவிரவாத இயக்கங்கள் வேற்றுமையின்றிக் கறுப்பின விடுதலைக்குப் போராடினர். நூறாண்டுகாலப் போராட்டங்கள் அடிமைத்தனத்தையும், வன்முறைகளையும், நிறவெறி ஒதுக்கலையும் படிப்படியாக வலுவிழக்கச் செய்தன.

**கறுப்பு ஓவிய இயக்கம் (The Black Arts Movement)**

இவோர் மில்லர் அமெரிக்க நா வெஸ்டர்ன் பல்கலைக் கழகத்தில் நிகழ் கலைத் துறையில் பேராசிரியராகப் பணியாற்றியர். இவர் எழுபதுகளில் நியூயார்க்கில் செயல்பட்ட 'ஓவிய இயக்கம்' பற்றியான ஐந்தாண்டு (1987-1992) பதிவுகளில் ஒரு ஆய்வுக்கட்டுரையை Race and Class July-Sep' 93 இதழில் இடம்பெற்றுள்ளது. எழுதியுள்ளார். அக்கட்டுரையின் தழுவலாக ஆப்ரோ - அமெரிக்கன் சிறப்பிதழாக வெளிவந்த நிறப்பிரிகையில் இடம்பெற்றுள்ளது.

1970களின் தொடக்கத்தில் நியூயார்க் நகரில் கறுப்பர்களால் தொடங்கப்பட்ட 'கறுப்பு ஓவிய இயக்கம்' ரயில் நிலையங்களிலுள்ள சுரங்கப் பாதைகளிலும், சுரங்கப் பாதை ரயில்களிலும் இந்த ஓவியக் கலைஞர்கள் தமது கையெழுத்தோவியங்களைப் பதித்தனர். 'கெரில்லாக் கலைஞர்கள்', 'தலை மறைவு ஓவியர்கள்', 'தொல்வரிப்பாணி (Graffiti) ஓவியர்கள்', தூசிப்படல (Aerosol)ஓவியர்கள்' எனப் பலவாறும் அழைக்கப்பட்டார்கள். இந்தக் கறுப்பினக் குழுக்கள் பல்வேறு உட்பிரிவுகளாகச் செயல்பட்டனர். ஆனால் இந்த இயக்கம் தோன்றிய பிறகு இணைந்து செயல்பட வழியேற்பட்டது.

**முகமது அலி**

வெள்ளையர்களின் பண்ணையில் கூலி வேலைச் செய்த ஒடெஸ்ஸா லீ – க்ரேடி க்ளே தம்பதிக்கு 1942 ஜனவரி 17ஆம் தேதி பிறந்தவர் தான் முகமது அலி. இவருக்குத் தோட்ட முதலாளியான கேசியஸ் மார்சலஸ் கிளே ஜூனியர்(Cassius Maricellus Clay Jr.)யின் பெயரையே சூட்டிக் கேசியஸ் கிளே என்று முகமது அலி அழைக்கப்பட்டார். இப்பெயரில் ஏற்கனவே அடிமை ஒழிப்பு அரசியல்வாதியும் இருந்துள்ளார். ஆனால் தனது வெற்றியைக் கொண்டாட உணவகத்திற்குச் செல்லும்போது கறுப்பர்களுக்கு அனுமதி இல்லையென்று கூறும்போது தான் பெற்ற தங்கப் பதக்கத்தையும் தனது பெயரையும் தூக்கியெறிந்தார் முகமது அலி. அவரே குறிப்பிடுவதுபோல, 'கேசியஸ் கிளே அடிமையின் பெயர். முஹம்மது அலீ விடுதலையின் அடையாளம்' என்று தனது பெயரை மாற்றிக்கொண்டார் முகமது அலி. 1996 ஒலிம்பிக்கில் எறியப்பட்ட தங்கத்திற்கு ஈடாக 1996 ஒலிம்பிக்கில் அதற்கு ஈடான ஒரு தங்கப் பதக்கத்தை வழங்கி அவரை அமெரிக்க அரசு மதிப்புசெய்தது. முகமது அலி தனது 21 ஆண்டுள் தொழில் முறை(Professional) குத்துச் சண்டை வாழ்க்கையில் 61 போட்டிகளில் ஈடுபட்டு 56 வெற்றிகளைக் குவித்துள்ளார். அவற்றில் மூன்று உலகச் சாம்பியன் பட்டங்கள். சிறது காலம் மதப் போதகராக இருந்த அலீ கறுப்பின ஒடுக்குமுறை எதிராகக் குரல்கொடுப்பதற்குக் கறுப்பின முஸ்லிம் இயக்கத்தில் இணைத்துக்கொண்டார். குறிப்பாக, கறுப்பின மக்களின் சுதந்திரத்திற்காகவும் மீட்சிக்காகவும் தன்னை அர்பணிக்கத் துணிந்த முகமது அலி, மார்ட்டின் லூதர் கிங்கின் போரட்டங்களையும் செயல்பாடுகளையும் விமர்சித்து வந்தார். இஸ்லாமியத் தேசம்(Nation of Islam) என்ற அமைப்பின் உறுப்பினரான, மால்கம் எக்ஸ் நிகழ்த்திய உரையால் கவரப்பட்டுத் தன்னை முழுமையாக இஸ்லாம் மார்க்கம் சார்ந்த அணுகுமுறையோடு வெள்ளையர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தார் முகமது அலி. அமெரிக்க வெள்ளையர்களிடம் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"ஓ... அமெரிக்கா, நான் உன்னில் ஓர் அங்கம். ஆனால் அதை நீ அங்கீகரிக்க மறுக்கிறாய். என்னை அகம்பாவம் பிடித்தவன் என்கிறாய். பரவாயில்லை, அது என் பெயராகவே இருந்து விட்டுப் போகட்டும். அது என் பெயர். உன்னுடையது அல்ல. என்னுடைய இலட்சியம் என்னுடையது, உன்னுடையது அல்ல. என்னைச் சகித்துக்கொள்ளப் பழகிக்கொள்"7 என்று கூறியுள்ளார். இக்கூற்று அம்பேத்கர் தலித் மக்களை எண்ணி இந்திய அரசாங்கத்திடம் தலித் மக்கள் இந்தியாவில் அங்கமற்ற அங்கமாக (A Part Apart) நடத்தப்படுகிறார்கள் என்ற கூற்றினைப் பொருத்திப்

பார்ப்பது அவசியமாகிறது. எனவே, கறுப்பின வீரர்களையும், ஆளுமைகளையும் வெள்ளையர்கள் இழிவானவர்களாகவே கருதினர். இவற்றையெல்லாம் எதிர்த்துக் கடைசி வரை போராடி நோய்வாய்ப்பட்டு இறந்துபோனார் முகமது அலி. அவரது இறுதிச் சடங்கில் அமெரிக்க அரசால் குரான் வாசிக்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

**முடிவாக**

காலந்தோறும் கறுப்பர்கள் நடத்திய போராட்டங்களைத் தொகுத்துப் பார்த்தால் அவர்கள் இன்று அடைந்த உரிமைகள் என்பது எளிமையாகக் கிடைக்கப்பெறவில்லை என்று நமக்கும் புலனாகிறது. அதைப்போல், மால்கம் எக்ஸ், மார்ட்டின் லூதர் கிங், கார்வி போன்றவர்களின் போராட்டங்கள் மாயா ஏஞ்சலோ, ஹேரியட் ஜேகப்ஸ், டோனிமோரிசன், சிமாண்டா என்கோசி அடிச்சி, அலெக்ஸ் ஹேலி உள்ளிட்ட எழுத்தாளர் உருவாகுவதற்கு அடித்தளமிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளையில், இந்தியாவில் நிலவுகிற இனரீதியிலான பாகுபாட்டைப் பாபாசாகேப் அம்பேத்கர் கறுப்பின மக்களோடு ஒப்பிடுகிறார். எனவே, கறுப்பர்கள் கறுப்பு நிறத்தைப் போர்க்கொடியாக உயர்த்திப் பிடிப்பதற்கு இதுபோன்ற இயக்கங்கள் முன்னணியாக நின்றன. இந்நிலையின் கறுப்பர்களின் உரிமைப் போராட்டம் உலகளவில் முன்னுதராங்களாவும் முதன்மையாகவும் திகழ்கிறது. இன்றைய தலித் இலக்கியங்களின் தன் வரலாற்றையும் கறுப்பர்களின் தன்வரலாற்றையும் ஒப்பிட்டும் பார்க்கும் அளவிற்குக் கறுப்பிலக்கியம் வளர்ந்துள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. தமிழில்: இஸ்கரா, காலத்தின் குரல், கிழக்கு பதிப்பகம், முதற்பதிப்பு, டிசம்பர் - 2022, (ப-12).
2. மேலது, ப - 19.
3. மேலது, ப-19.
4. ரவிக்குமார், மால்கம் எக்ஸ், முதல்பதிப்பு : டிசம்பர் - 2010, ப-7.
5. மேலது, ப-8.
6. ரவிக்குமார், பா மார்லி இசைப்போராளி, ப-54
7. அப்துல் ஜப்பார், குதுப்தீன், அப்துல் சமது, நிறவெறியைக் குத்தி வீழ்த்திய வித்தகன், இலக்கியச்சோலை பதிப்பகம், ப-9.

# சங்க வாழ்த்து

பொன்னும் துகிரும் முத்தும் மணியும்
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும் தொடைபுணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங்கு உலகுவாழ் தமிழர்
தண்ணிய உறவால் தழைத்தனர்
உலகத் தமிழ்ச் சங்கம் உண்மை யானே...!

– உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

E-ISSN : 2581 - 9712